செய்தி வெளியீடு **நாள்: 7.1.2026**

சிஎம்டிஏ சார்பில் சுமார் ரூ.100 கோடி மதிப்பீட்டில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையம் 2026 பிப்ரவரி மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும். மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி இன்று (7.1.2026) மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் சார்பில் பிரம்மாண்டமாக கட்டப்பட்டு வரும் செங்கல்பட்டு புதிய பேருந்து நிலையத்தின் கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, விரைந்து பணிகளை முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரரை அறிவுறுத்தி, ஆலோசனைகள் வழங்கினார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :

திராவிட மாடல் ஆட்சி அமைந்த பிறகு பேருந்துகள் அதிகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக போக்குவரத்து பயணிகளின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, இந்த ஆட்சி அமைந்த பின்னர், 2026 ஆம் ஆண்டில் 10 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த பேருந்து நிலையத்திலிருந்து நம் பக்கத்து மாநிலங்களான பெங்களூரு, திருப்பதி போன்ற இடங்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்கேற்பவும், அதேபோல் உள்ளூரிலிருந்து இந்த பேருந்து நிலையத்திற்கு வருவதற்கான இணைப்புப் பேருந்துகளையும் இயக்குவதற்கான பணிகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இன்றைக்கு சுமார் 100 கோடி ரூபாய் செலவில், கிட்டத்தட்ட ஒரு பிரதான கட்டிடம், மூன்று நுழைவாயில்கள், ஒரே நேரத்தில் 56 பேருந்துகள் நிறுத்துவதற்கான வசதி, ஒரு நாளில் 560 முறை பேருந்துகள் இயக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஒரு நாளைக்கு சுமார் 25,000 பேர் வந்து செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விழா காலங்களிலும் விடுமுறை காலங்களிலும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என நாங்கள் கணக்கிட்டுள்ளோம்.

வரும் மக்களின் வசதிக்காக மலிவு விலை உணவகம், அதேபோல் இரண்டு தனியார் உணவகங்கள், போக்குவரத்து ஊழியர்கள் தங்குவதற்காக இரண்டு டார்மிடரிகள், போக்குவரத்து துறைக்கான கலந்தாய்வுக் கூடம், கழிவுநீர் வெளியேற்றத்திற்கான கழிவுநீர் வெளியேற்று நிலையம் (எஸ்.டி.பி) வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர், முதலுதவி சிகிச்சை மையம், எதிர்பாராத உடல்நலக் குறைவு ஏற்படும் பயணிகளுக்கான மருத்துவ வசதி, ஆவின் பாலகம், ஏடிஎம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் கூடிய 34 கடைகள் அமைக்கப்படுகின்றன.

மேலும், பயணிகள் சிறிது காலதாமதம் ஏற்பட்டால் ஓய்வெடுக்க வசதியாக, அருகிலேயே ரூபாய் 94 லட்சம் செலவில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வெண்பாக்கம் குளத்தை மேம்படுத்தி நவீன வசதிகளுடன் கூடிய நடைபாதையுடன் கூடிய பூங்கா அமைக்கப்பட்டடு வருகிறது. இந்த பேருந்து நிலையம் தேர்தல் அறிவிப்பு காலத்திற்கு முன்பாக மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்

Verified @ RedEstate™

என்பதற்காக, இந்த மாவட்டத்தின் அமைச்சர் அவர்களது சிறப்பான முயற்சியாலும், அண்ணன் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களது தீவிர முயற்சியாலும், இந்த பேருந்து நிலையம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

இன்றைக்கு நான்காவது முறையாக, நானும் எங்கள் துறையின் செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்களும், துறையின் உறுப்பினர் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்களும், மாவட்ட ஆட்சியாளர் அன்பிற்கினிய திருமதி.தி.சினேகா, இ.ஆ.ப., அவர்களும், துறையின் சிஇஓ திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்களும், எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் சகோதரி திருமதி.வரலட்சுமி மதுசூதனன் அவர்களும், மேலும் காவல்துறை, போக்குவரத்து துறை, வருவாய் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளின் அலுவலர்களும் ஒருங்கிணைந்து, கூடுதலாக தேவைப்படும் கட்டமைப்பு வசதிகள் மற்றும் பயணிகளுக்கு தேவையான கூடுதல் வசதிகள் குறித்து இன்று கலந்தாய்வு செய்துள்ளோம்.

நிச்சயமாக, இந்த பேருந்து நிலையம் தேர்தல் அறிவிப்பிற்கு முன்பாக அனைத்து பணிகளும் நிறைவு செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்பேருந்து நிலையத்தில் மூன்று நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒன்று பயணிகளுக்காகவும், மற்றொன்று பேருந்துகள் உள்ளே செல்லவும், மேலும் பணிபுரியும் போக்குவரத்து பேருந்துகளில் சிறிய பழுதுகள் அல்லது ரிப்பேர் வேலைகள் செய்ய தனியான பணிமனையும் உள்ளே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

10 ஏக்கர் நிலப்பரப்பில் போதிய வசதிகளுடன், கூட்ட நெரிசல் இல்லாமல் இந்த பேருந்து நிலையம் செயல்படும். ஏற்கனவே நாங்கள் செயல்படுத்திய கிளாம்பாக்கம் பேருந்து முனையம் மற்றும் ஜனவரி மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ள குத்தம்பாக்கம் பேருந்து நிலையங்களில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், அதிகரித்து வரும் பயணிகளின் தேவைக்கு ஏற்ப அனைத்து வசதிகளையும் போக்குவரத்து நெரிசல் இல்லாமல் ஏற்படுத்துவோம் என்பதில் முழு நம்பிக்கை உள்ளது.

பொங்கல் பரிசுத் தொகுப்புடன் ரொக்கம் வழங்குவது அரசியல் ஆதாயம் என எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டுக்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதில்:

காமாலை கண் பிடித்த ஒருவருக்கு கண்டதெல்லாம் மஞ்சளாகத் தெரிவது போல, இந்த ஆட்சியில் எது செய்தாலும் அதில் குற்றம் காண்பது அவர்களின் வழக்கமாகிவிட்டது. ஆனால் மக்கள் சார்ந்த அரசியலை மக்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு, எங்கு பார்த்தாலும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த ஆண்டின் தொடக்கத்திலிருந்தே **மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர்** அவர்களின் திட்டங்களைப் பார்த்தால், மகளிருக்கு ரூ.3000 உதவித் தொகை, 10 லட்சம் மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கல், அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு சலுகைகள் ஆகியவற்றால் தமிழ்நாடு, பொங்கல் மகிழ்ச்சியுடன் கொண்டாட தயாராக உள்ளது.

அங்கொன்று, இங்கொன்று ஏற்படும் சிறிய பிரச்சனைகளையும் **மாண்புமிகு முதல்வர் அவர்களின்** சாதுரியமான நிர்வாகத்தால் எதிர்கொண்டு தீர்வு காணப்பட்டு வருகிறது. ஆகையால், இதுபோன்ற விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல், மக்களின் தேவைகளையும் நாட்டின் வளர்ச்சியையும் முன்னிலைப்படுத்தி இந்த அரசும் அமைச்சர்களும் செயல்பட வேண்டும் என்பதே

Verified RealEstate™

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உத்தரவு. இத்தகைய விமர்சனங்களை கடந்து நாம் முன்னே செல்வோம். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சினேகா, இ.ஆ.ப., சார் ஆட்சியர் திருமதி.எஸ்.மாலதி ஹெலன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (சிஎம்டிஏ) டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், (செங்கல்பட்டு) திரு.கணேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.ஸ்ரீதேவி, கண்காணிப்பு பொறியாளர் திரு.பாலமுருகன், காட்டாங்குளத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.உதயா கருணாகரன், ஆலப்பாக்கம் வனக்குழுத் தலைவர் திரு.திருமலை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™